1971 ஜூலை 17]

தீர்மானத்தை ஆரணி நகராட்சி மன்றம் ஏற்கனவே நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறது. அதை அரசாங்கம் அறியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஊருக்கு ஊர் அப்படி மாறுகின்ற தன்மை இருக்கிறது. ஆரணி போன்ற இடங்களை சென்னையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதிகப் படியான விலக்குகள் ஏற்படுகிற சூழ்நிலைதான் இருக்குமே தவிர சென்னையைப் போன்றிருக்காது. ரூ. 18 என்பதை ரூ. 24 என்று செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக் கிறார்கள். இதில் அதிகமான வித்தியாசம் இல்லை. அதனால் ஏற்படுகிற நஷ்டத்தைப் பார்க்கவேண்டும். ஒரு பக்கத்தில் ஊராட்சி மன்றங்கள் தங்கள் நிதி வசதியைப் பெருக்கவேண்டு மென்று சொல்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் முக்கியமான வரியை எடுத்துவிட்டால் எந்த வகையில் நிதி சேர்ப்பது என்பதையும் கவனிக்கவேண்டும். ஆகவே எல்லாவற்றையும் ஆராய்ந்துதான் செய்யவேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், அமைச்சர் அவர்கள் கூறுகிற பதில் 1920-ம் வருஷம் சட்டத்தின்படி ரூ. 18-க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்குத் தான் விதிவிலக்கு என்று கூறினார்கள். 1920-ம் வருஷம் சட்டம் என்று சொன்னால் இன்று 50 வருஷம் ஆகிவிட்டது. இதற்கிடையில் விலைவாசிகள் எவ்வளவோ உயர்ந்து போய் எல்லாத் துறைகளிலும் உயர்த்தித் தரவேண்டுமென்று இருக்கிற நிலைமையில், சோஷலிஸக் கோட்பாடுகளை நாம் நிறைவேற்ற உறுதி பூண்டு இருப்பதால், ஏழை எளியவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கும் வகையில் இதையும் உயர்த்தித் தர அரசு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஆங்காங்கு இருக்கும் நிலைமைகளை ஒட்டி நகராட்சிமன்றங்கள் தங்களது கருத்துக்களை அரசுக்கு எழுதுவார்களானால், அதைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 283, 284 தள்ளி வைக்கப்படுகின்றன.

வினா எண்கள் 285, 286 ஒருசேர எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

### பஞ்சப் பகுதியென அறிவிக்கப்பட்ட வட்டங்கள்.

*285 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள எந்தெந்த தாலுக்காக்களை தற்போது பஞ்சப் பிரதேசமாக மத்திய அரசு அங்கீகரித் துள்ளது ?

(இ) அவற்றிற்கு மத்திய அரசு அளித்து வரும் உதவிகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) பஞ்சப் பகுதியென்று எந்த வட்டமும் இந்திய அரசினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இருந்தபோதிலும் தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஹரூர், ஊத்தங்கரை ஆகிய வட்டங்களையும், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம். முதுகுளத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய வட்டங்களையும் பன்னெடுங்காலமாகவே மிக வறண்ட பகுதிகளென இந்திய அரசு வகைப்படுத்தி வறட்சிப் பாங்கான பகுதிகளில் மத்திய அரசு பொறுப்பேற்கும் கிராமப் பணிகள் சிறப்பு வேலைத் திட்டத்தில் அவற்றைச் சேர்த்துள்ளது. எனினும், இந்திய அரசு பின்னர் ஏற்பளிக்குமென எதிர்பார்த்து இந்த அரசு இவ்விரு மாவட்டங்களில் உள்ள ஏனைய வட்டங்களையும் சிறப்புத் திட்டத்தின் கீழ் சேர்த்துள்ளது.

(இ) 1970-71-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் இந்திய அரசு தருமபுரி மாவட்டத்திற்கு ரூ. 46.5 லட்சமும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 60.5 லட்சமும் வழங்கியுள்ளது.

*Irrigation facilities to drought affected areas.*

* 286 Q.—Dr. H. V. HANDE:
THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the Union Goverment have agreed to include. Ramanathapuram and Dharmapuri districts in perenially drought affected areas chosen for improving irrigation facilities with the special fund of Rs. 100 crores; and

(b) if so, whether its decision has been announced?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஹரூர், ஊத்தங்கரை ஆகிய வட்டங்களையும். இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம், முதுகுளத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய வட்டங்களையும் பன்னெடுங்காலமாகவே மிக வறண்ட பகுதிகளென இந்திய அரசு வகைப்படுத்தி, வறட்சிப்பாங்கான பகுதிகளில் மத்திய அரசு பொறுப்பேற்கும் கிராமப் பணிகள் சிறப்பு வேலைத் திட்டத்தில் அவற்றைச் சேர்த்துள்ளது. இந்த வேலைத் திட்டம் 1970-71-லிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. எனினும், இந்திய அரசு பின்னர் ஏற்பளிக்கும் என எதிர்பார்த்து, இந்த அரசு இவ்விரு மாவட்டங்களிலுமுள்ள ஏனைய வட்டங்களையும் சிறப்புத் திட்டத்தின் கீழ்ச் சேர்த்துள்ளது.